www.kalvikural.com

முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்!


# விடியல் பயிற்சி மையம்
## வேலூர்
செல்: 8122706441, 9487640063
www.vidiyalarni.blogspot.in


## TRB PG ASSISTANT EXAM - பயிற்சி வினாத்தாள் 3. நாள் 02.11.2014
### தமிழ் – Unit 6

1. சங்கம் இருந்ததற்கானச் சான்று பகர்வது
   A) உத்திரமேரூர் கல்வெட்டு  B) அசோகர் கல்வெட்டு
   C) மாமல்லைச் சிற்பங்கள்  **D) சின்னமனூர்ச் செப்பேடு**
2. கடைச்சங்கத்தைத் தோற்றுவித்தவர்
   A) காய்ச்சின வழுதி  B) வெண்டேர்ச்செழியன்
   **C) முடத்திருமாறன்**  D) வச்சிரநந்தி
3. நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
   **A) 1901**  B) 1902  C) 1903  D) 1904
4. பாட்டும் தொகையும் என்பவற்றுள் “பாட்டு” என்பது
   A) குறுந்தொகை  **B) பத்துப்பாட்டு**
   C) திருமுருகாற்றுப்படை  D) எட்டுத்தொகை
5. எட்டுத்தொகையில் அகமும் புறமும் கலந்த நூல்
   A) நெடுநல்வாடை  B) பட்டினப்பாலை  C) அகநானூறு  **D) பரிபாடல்**
6. பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி தொகுப்பித்த நூல்
   A) ஐங்குறு நூறு  **B) நற்றிணை**  C) குறுந்தொகை  D) பரிபாடல்
7. தொகை நூல்களுள் முதல் முதலாகத் தொகுக்கப் பெற்ற நூல்
   A) ஐங்குறு நூறு  B) நற்றிணை  **C) குறுந்தொகை**  D) பரிபாடல்
8. ஐங்குறுநூற்றில் முல்லைத்திணையைப் பாடியவர்
   A) ஓரம் போகியார்  B) அம்மூவனார்  C) கபிலர்  **D) பேயனார்**
9. கலித்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடி அந்நூலைத் தொகுத்தவர்
   A) நல்லுருத்திரன்  **B) நல்லந்துவனார்**  C) மருதனிளநாகனார்  D) கபிலர்
10. தமிழரின் திருமண முறையைக் காட்டும் நூல்
    A) குறுந்தொகை  B) ஐங்குறு நூறு  **C) அகநானூறு**  D) புறநானூறு

விடியல் வேலூர்

11. புறனாநூற்றில் அதிக பாடல்களைப் பாடியவர்.

A) பொன்முடியார் B) கபிலர் C) பரணர் **D) ஔவையார்**

12. சேர மன்னர்களைப் பற்றி மட்டும் பாடும் நூல்

A) புறனாநூறு B) களவழி நாற்பது **C) பதிற்றுப் பத்து** D) நெடுநல்வாடை

13. பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்த ஆற்றுப்படை நூல்

**A) திருமுருகாற்றுப்படை** B) பொருநராற்றுப்படை

C) பெரும்பாணாற்றுப்படை D) எதுவுமில்லை

14. கடையெழு வள்ளல்களின் சிறப்பைக் கூறும் நூல்

A) புறநானூறு B) களவழி நாற்பது

**C) சிறுபாணாற்றுப்படை** D) கூத்தராற்றுப்படை

15. தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்

A) கூத்தராற்றுப்படை B) பொருநராற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை **D) பெரும்பாணாற்றுப்படை**

16. முடத்தாமக் கண்ணியார் எழுதிய நூல்

A) கூத்தராற்றுப்படை **B) பொருநராற்றுப்படை**

C) சிறுபாணாற்றுப்படை D) பெரும்பாணாற்றுப்படை

17. "மலைபடுகடாம்" என்பது

**A) கூத்தராற்றுப்படை** B) பொருநராற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை D) பெரும்பாணாற்றுப்படை

18. 'நெஞ்சாற்றுப்படை' என்ற பெயர் கொண்ட நூல்

A) குறிஞ்சிப்பாட்டு **B) முல்லைப்பாட்டு** C) பட்டினப்பாலை D) நெடுநல்வாடை

19. குறிஞ்சிப்பாட்டை முதன் முதலில் பதிப்பித்தவர்

A) சி.வை. தாமோதரம்பிள்ளை B) பின்னத்தூர் நாராணசாமி ஐயர்

C) நாதமுனிஅடிகள் **D) உ.வே.சா.**

20. "நறவு மகிழ்தல் " என்பது

A) தேன் சுவைத்தல் **B) இறை இன்பம் அனுபவித்தல்**

C) ஆன்மா D) இன்பம்

21. "பயணவழிகாட்டி" நூல் என்ற சிறப்புக்குரிய நூல்

A) மதுரைக்காஞ்சி **B) பட்டினப்பாலை** C) நெடுநல்வாடை D) குறிஞ்சிப்பாட்டு

22. நெடுநல்வாடையைச் "சிற்பப்பாட்டு" எனக் கூறியவர்

A) கா.சு.பிள்ளை B) Dr. மு.வரதராசனார் **C) தமிழண்ணல்** D) உ.வே.சா.

23. சங்க இலக்கியத்தைத் தொகுத்தவர்

A) உ.வே.சா. B) நல்லந்துவனார் **C) தாமோதரம் பிள்ளை** D) பூரிக்கோ

24. வையையைச் சிறப்பித்துப் பாடும் சங்க நூல்

A) தொல்காப்பியம் B) சிலப்பதிகாரம் C) பட்டினப்பாலை **D) பரிபாடல்**

25. குடவோலைத் தேர்தல் முறை பற்றிக் குறிப்பிடும் நூல்

A) புறநானூறு **B) அகநானூறு** C) கலித்தொகை D) பதிற்றுப்பத்து

26. "எத்திசை செலினும் அத்திசைச் சோறே" என்று பாடியவர்

A) காக்கைப்பாடினியார் B) கபிலர் C) பரணர் **D) ஔவையார்**

27. சங்க இலக்கியப் பெண்பாற் புலவரில் சோழ அரச மங்கையாகத் திகழ்ந்தவர்

**A) ஆதிமந்தியார்** B) பொன்முடியார்

C) காக்கைப்பாடினியார் D) பெருங்கோப்பெண்டு

28. "எயில் காத்தல்"

**A) நொச்சி** B) கரந்தை C) வெட்சி D) வஞ்சி

29. முல்லைத்திணையின் உரிப்பொருள்

A) இரங்கல் B) ஊடல் C) பிரிதல் **D) இருத்தல்**

30. "கொல்லேற்று கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்" - இடம் பெறுவது

A) புறநானூறு B) அகநானூறு **C) கலித்தொகை** D) பதிற்றுப்பத்து

31. சோழன் கோச்செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் போர் புரிந்த இடம்

A) குடவாயில் B) தலையாலங்கானம் **C) கழுமலம்** D) இவற்றுள் எதுவுமில்லை

32. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை' எனக் கூறும் நூல்

A) நன்னூல் B) வீரசோழியம் **C) தொல்காப்பியம்** D) புறநானூறு

33. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் புகழ்ந்து கூறுவது

A) அரசவாகை B) மூதின் முல்லை **C) பாடாண் திணை** D) இயன்மொழி

34. பெருந்திணை என்பது

**A) பொருந்தாக் காதல்** B) ஒருதலைக் காதல் C) அன்புடைக் காதல் D) மரபுக் காதல்

35. அகத்திணை எத்தனை வகைப்படும்?

A) ஐந்து **B) ஏழு** C) நான்கு D) ஆறு

36. பொருத்தம் காண்க :

A) காஞ்சி - பாலை

**B) கைக்கிளை - பாடாண்**

C) வாகை - பெருந்திணை

D) வெட்சி - முல்லை

37. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

குறிஞ்சித்திணைக்குரிய சிறுபொழுது

A) நண்பகல் B) மாலை **C) யாமம்** D) வைகறை

38. பொருத்தமற்றதைக் கண்டறிக :

A) ஊர்கொலை - வெட்சித் திணை

B) குடிநிலை - கரந்தைத் திணை

**C) கொற்றவள்ளை - காஞ்சித்திணை**

D) மறனுடைப்பாசி - நொச்சித்திணை

39. கீழ்கண்ட கூற்றுகளை ஆய்க : சங்க இலக்கிய புலவர்கள்

i) கபிலர் ii) ஓரம் போகியார் iii) நல்லந்துவனார் iv) கணியன் பூங்குன்றனார்.

இவற்றுள் :

A) i) மட்டும் சரியானது B) ii) மட்டும் சரியானது

C) முதல் மூன்றும் சரியானவை **D) அனைத்தும் சரியானவை.**

40. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) குறிஞ்சி | 1. இரங்கல் |
| b) முல்லை | 2. ஊடல் |
| c) மருதம் | 3. இருத்தல் |
| d) நெய்தல் | 4. புணர்தல் |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | **4** | **3** | **2** | **1** |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

41. பொருத்தமானதைச் சுட்டுக :

A) தூதிற் பிரிவு - கால வரையறையில்லை

B) துணைவயிற் பிரிவு - கால வரையறையில்லை

C) பொருள்வயிற் பிரிவு - கால வரையறையில்லை

**D) ஓதற்பிரிவு - மூன்று ஆண்டுகள் மட்டும்.**

42. "எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'
இத்தொடரைப் பாடிய சங்கப் புலவர்

A) நக்கீரனார் B) கபிலர் C) மாங்குடி மருதனார் **D) ஔவையார்**

43. எது சரி ?

A) செல்வத்துப் பயனே துய்த்தல்

B) அல்லது செய்தல் ஆற்றீராயினும் நல்லது செய்தல் ஒம்புமின்

**C) வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்**

D) மறநெறி முதற்றே அரசின் கொற்றம்

44. முதற் சங்கத்தை தோற்றுவித்தவர்

A) முடத்திருமாறன் **B) காய்ச்சின வழுதி** C) கடுங்கோன் D) வெண்டேர்ச்செழியன்

45. சிறுபாணாற்றுப்படையின் அடி அளவு

**A) 269** B) 248 C) 261 D) 500

46. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) கூடலூர் கிழார் | 1. அகநானூறு |
| b) பூரிக்கோ | 2. குறுந்தொகை |
| c) நல்லந்துவனார் | 3. ஐங்குறுநூறு |
| d) உருத்திரசன்மனார் | 4. கலித்தொகை |

குறியீடுகள் :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| **C)** | **3** | **2** | **4** | **1** |
| D) | 2 | 4 | 3 | 1 |

47. அகநானூற்றைத் தொகுத்தவர்
A) கூடலூர் கிழார் B) உப்பூரிக்குடி கிழார் **C) உருத்திரசன்மன்** D) பெயர் தெரியவில்லை

48. பத்துப்பாட்டை பாடிய புலவர்களின் எண்ணிக்கை
A) 10 B) 9 C) 7 **D) 8**

49. பாடல் எண் அடிப்படையில் தொகுக்கப்பட்ட தொகை நூல்
A) அகநானூறு B) ஐங்குறு நூறு **C) கலித்தொகை** D) புறநானூறு

50. கார்காலம் என்பது எந்த இருமாதங்கள்?
A) சித்திரை, வைகாசி B) ஆனி, ஆடி **C) ஆவணி, புரட்டாசி** D) ஐப்பசி கார்த்திகை

51. புகாரின் பெருமையைக் கூறும் பத்துப்பாட்டு நூல்
A) குறிஞ்சிப்பாட்டு B) மதுரைக்காஞ்சி **C) பட்டினப்பாலை** D) முல்லைப்பாட்டு

52. பாலைத்திணைக்கு உரிய புறத்திணை
A) வஞ்சி **B) வாகை** C) வெட்சி D) காஞ்சி

53. கபிலர் பாடிய அகப்பாடல்கள்
**A) 235** B) 100 C) 38 D) 197

54. 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற் கனகக்கிழி தருமிக் கருளினோன் காண்' - யார் கூற்று?
A) திருஞானசம்பந்தன் **B) திருநாவுக்கரசர்** C) ஔவையார் D) மாணிக்கவாசகர்

55. கடைச்சங்கத்தை ஆதரித்த புலவர்கள் எத்தனை பேர்?
**A) 49** B) 1850 C) 449 D) 59

56. தொல்காப்பியம் எந்த சங்கத்தைச் சார்ந்த நூல்?
A) கடைச் சங்கம் B) இடைச்சங்கம் **C) முதற்சங்கம்** D) நான்காம் தமிழ்ச்சங்கம்

57. 269 அடிகளைக் கொண்ட நூல்
A) திருமுருகாற்றுப்படை B) பொருநராற்றுப்படை
**C) சிறுபாணாற்றுப்படை** D) பெரும்பாணாற்றுப்படை

58. கலித்தொகை எதன்வழிப் பெயர் பெற்றது?

A) பொருள் வகையால் B) கூற்று வகையால் C) திணை வகையால் D) யாப்பு வகையால்

59. ‘விரிச்சி’ என்பதன் பொருள்

A) ஆற்றியிருத்தல் B) காத்திருத்தல் C) நற்சொல்கேட்டல் D) நாழிகை அறிதல்

60. பாலைத்திணைக்கு உரிய சிறுபொழுது

A) யாமம் B) நண்பகல் C) காலை D) எற்பாடு

61. நற்றிணையில் பாடப்பட்டுள்ள கடவுள்

A) திருமால் B) முருகன் C) சிவன் D) கலைமகள்

62. குறுந்தொகையை தொகுப்பித்தவர்

A) மாறன் வழுதி B) உக்கிரப்பெருவழுதி C) இரும்பொறை D) பூரிக்கோ

63. பரிபாடலுக்கு உரிய சிறப்புப்பெயர்

A) சிற்பப்பாட்டு B) காஞ்சிப்பாட்டு C) இசைப்பாட்டு D) பாலைப்பாட்டு

64. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன்

A) இளந்திரையன் B) நல்லியக்கோடன் C) கரிகாலன் D) நெடுஞ்செழியன்

65. ‘புண் உமிழ் குருதி முகம்பாய்ந் திழிதர’-இடம்பெறும் நூல்

A) பதிற்றுப்பத்து B) குறிஞ்சிப்பாட்டு C) புறநானூறு D) பட்டினப்பாலை

66. பத்துப்பாட்டில் அதிக அடி கொண்ட நூல்

A) மலைபடுகடாம் B) பெரும்பாணாற்றுப்படை

C) மதுரைக் காஞ்சி D) திருமுருகாற்றுப்படை

67. குறிஞ்சித் திணைக்குரிய பெரும் பொழுது

A) கார் B) இளவேனில் C) முன்பனி D) பின்பனி

68. இன்னே வருகுவர் தாய ரென்போ
நன் நகர் நன்மொழி கேட்டனம் - கேட்டது யார்?

A) முதுபெண்டிர் B) சிறுமி C) தலைவி D) தலைவன்

69. “அன்னாய் வாழி வேண் டன்னை ஒண்ணுதல்
ஒலிமென் கூந்தல் என் தோழி ...” பாடியவர் யார்?

A) நப்பூதனார் B) உருத்திரங்கண்ணனார்

C) கபிலர் D) நக்கீரர்

70. முல்லைப்பாட்டின் துறை எது?

A) அறத்தொடு நிற்றல் B) நெஞ்சை ஆற்றுப்படுத்துதல்

C) செலவழுங்குதல் D) காமம்மிக்க கழிபடர் கிளவி.

71. சங்க இலக்கியம் இவ்வாறும் அழைக்கப்படும்

A) உலா இலக்கியம் B) பள்ளு இலக்கியம் C) எண் கணக்கு D) திணை இலக்கியம்

72. ஆக்கள் நிலைத்து நிற்கும் தொழுவத்துக்கு வழங்கும் பெயர்

A) ஆநிலை B) தமிழ்நிலை C) தொழுவநிலை D) ஆகோள்

73. எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமே சங்க இலக்கியம் என உணருமாறு உரை செய்தவர்கள்

A) இளம்பூரணர் B) நச்சினார்க்கினியர் C) பேராசிரியர் **D) B & C**

74. எட்டுத் தொகையுள் காலத்தால் முற்பட்ட பாடல்களைக் கொண்ட நூல்

**A) புறநானூறு** B) குறுந்தொகை C) நற்றினை D) அகநானூறு

75. தமிழ்நாட்டில் கவி ஆய்வு மேற்கொண்ட முதல்வராக, தொகைநூல் வழங்கிய முதல்வராகத் திகழ்ந்தவர்

**A) பூரிக்கோ** B) உருத்திரன்சன்மனார்

C) உ.வே.சா D) உப்பூரி குடிகிழார்

76. தொகை நூல்களுள் காலத்தால் பிற்பட்டது

A) புறநானூறு B) குறுந்தொகை **C) கலித்தொகை** D) நற்றினை

77. குறுந்தொகைக்குக் "குறுந்தொகை நானூறு" என்ற பெயர் இருந்தமையைக் காட்டும் நூல்

A) கலித்தொகை **B) இறையனார் களவியலுரை**

C) திருமுருகாற்றுப்படை D) சிலப்பதிகாரம்

78. "மள்ளர் குழீஇய விழவி னானும்" எனும் குறுந்தொகைப் பாடலைப் பாடியவர்

A) நச்செள்ளையார் B) பொன்முடியார்

C) காக்கைப் பாடினியார் **D) ஆதிமந்தியார்**

79. "வெண்பா நடைத்து" எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவது

A) கலிப்பா B) பரிபாடல் C) சுரிதகம் **D) A & B**

80. யாப்பால் இயற்றமிழ், வழங்கொலியால் இசைத்தமிழ், பா அமைப்பால் நாடகத் தமிழ் என முத்தமிழ் விருந்தாய் அமைவது

**A) கலித்தொகை** B) பரிபாடல் C) புறநானூறு D) குறுந்தொகை

81. காலின் ஏழடிப் பின்சென்று வழியனுப்பியவன்

A) உக்கிரப்பெருவழுதி B) பாண்டியன் நெடுஞ்செழியன்

C) பாரி **D) கரிகாற்பெருவளத்தான்**

82. இன்றைய திண்டிவனத்தின் பழைய பெயர்

A) ஓய்மானாடு **B) கிடங்கில்** C) பூம்புகார் D) கல்வராயன்

83. பல்குன்றத்து கோட்டத்தை ஆண்ட வேளிர் மரபினன்

A) பேகன் B) காரி

**C) நன்னன் சேய் நன்னன்** D) ஓரி

84. செங்கண்மாத்துவேள் எனப்பட்டவன்

A) பேகன் B) காரி

**C) நன்னன் சேய் நன்னன்** D) ஓரி

85. முல்லைப் பாட்டின் பாவகை

**A) நேரிசை ஆசிரியப்பா** B) இணைக்குறள்

C) நிலைமண்டில ஆசிரியப்பா D) அடிமறிமண்டில ஆசிரியப்பா

86. நெடுநல்வாடை ஒரு பெருஞ்சுரங்கம், நக்கீரர் கண்ட சுரங்கம்; தமிழ்ச் சுரங்கம் என்று பாராட்டியவர்

A) மறைமலையடிகள் B) திரு.வி.க

C) ரா.பி சேதுப்பிள்ளை D) நச்சர்

87. நெடுநல்வாடையின் சிறப்புகளை விளக்கி புனையா ஓவியம் என்னும் அரிய நூலை இயற்றியவர்

A) கு. கோதண்டபாணி B) செ.வேங்கடராமச் செட்டியார்

C) கு. சின்னப்பா பாரதி D) சேஷகிரி

88. ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழ் அறிவித்தற்குக் குறிஞ்சிப்பாட்டைப் பாடினார் கபிலர் என்ற குறிப்பைத் தந்தவர்

A) இளம்பூரணர் B) பேராசிரியர் C) சேனாவரையர் D) நச்சினார்க்கினியர்

89. குறிஞ்சிப்பாட்டைப் "பெருங்குறிஞ்சி" எனப் பாராட்டியவர்கள்

I. பரிமேலழகர் II. நச்சினார்க்கினியர் III. மறைமலையடிகள் IV. ரா.பி, சேதுப்பிள்ளை

A) I, II மட்டும் B) II, III மட்டும் C) III, IV மட்டும் D) IV, I மட்டும்

90. பட்டினப் பாலையில் பயின்று வரும் துறை

A) அறத்தொடு நிற்றல் B) செலவழுங்கல்

C) பொருண்மொழிக் காஞ்சி D) செவியறிவுறூஉ

91. தோழி அறத்தொடு நிற்றலை எத்தனை வகையின என்கிறார் தொல்காப்பியர்?

A) 7 B) 5 C) 3 D) 6

92. மறைபிறர் அறியாமை என்பது

A) அறிவு B) செறிவு C) நிறை D) முறை

93. எட்டுத் தொகையைத் தொகுப்பித்த மன்னருள் பாண்டியர்

A) இருவர் B) ஒருவர் C) மூவர் D) ஐவர்

94. தருமி வரலாற்றுக்கு ஊற்றாக விளங்குவது

A) நற்றிணை B) குறுந்தொகை C) ஐங்குறுநூறு D) கலித்தொகை

95. குறுந்தொகையில் மிக அதிகமாகப் பாடியுள்ள பெண்பாற் புலவர்கள்

A) இருவர் B) ஒருவர் C) மூவர் D) ஐவர்

96. ஐங்குறுநூற்றில் அந்தாதி வகையில் அமைந்துள்ள பத்து

A) வேட்கைப் பத்து B) வேடிப்பத்து C) தொண்டிப்பத்து D) மஞ்ஞைபத்து

97. அகநானூற்றில் நல்லாவூர் கிழார் காட்டுவது

A) குடவோலை முறை B) பழந்தமிழரின் திருமண முறை

C) ஆடுமகள் பாவைபோல வெறியாடும் நிலை D)குறத்தியின் பாடல் இனிமையில் யானை மயங்குவது

98. இரும்புக் கடலை என்பது

A) பதிற்றுப்பத்து B) புறநானூறு C) பரிபாடல் D) கலித்தொகை

99. பரிபாடலில் இடம் பெற்றுள்ள எண்ணுப் பெயர்கள்

A) பாழ் B) பாகு C) தொண்டு D) இவை அனைத்தும்

100. பத்துப்பாட்டு முழுவதையும் நச்சர் உரையுடன் வெளியிட்டவர்

A) உ.வே.சா B) சி.வை. தாமோதரம்பிள்ளை

C) ஔவை துரைசாமிபிள்ளை D) மு. ராகவையங்கார்

# படிப்பது சுகமே

- ஒவ்வொரு வாரமும் நிகழ்ந்த பாடத்தை அந்த வார இறுதியில் ஒருமுறை திருப்பி வாசிப்பது நிறைவைத் தரும். அதன் மூலம் தேர்வு நேரத்தில் ஏற்கெனவே நன்றாக அறிமுகமானவற்றைப் படிக்கிற அனுபவம் ஏற்படும்.
- அந்தந்த வாரங்களில் நடந்த பாடங்களை அந்தந்த வாரங்களிலேயே படித்து முடிப்பதன் மூலம் திட்டமிட்ட வழிமுறையைத் தேர்வுக்குச் சாதகமாக வகுக்கிற திருப்தியும் ஏற்படும்.
- வார இறுதியில் நிகழ்த்தும் மறுவாசிப்பின்போது ஒவ்வொரு பாடத்திலும் வரக்கூடிய கேள்விகளைப் பட்டியலிட்டு "Question bank" (கேள்வி வங்கி) தயாரிப்பது நல்லது.
- ஒரு குறிப்பிட்ட கேள்வியை எப்படி அணுகினாலும் விடையளிக்கும் சாமர்த்தியத்தை அது நமக்கு அளிக்கும்.
- படிப்பது என்பது தேர்வு வரை நீடிப்பது. அதில் மொத்தம் ஏழு படிகள் உள்ளன

  1. வாசித்தல் (Reading)
  2. நினைவில் வைத்துக் கொள்ளுதல் (Remembering)
  3. ஞாபகப்படுத்திப் பார்த்தல் (Recapitulating)
  4. படித்தவற்றை வகையாக வெளிப்படுத்துதல் (Reproducing)
  5. எழுதியவற்றை திரும்ப வாசித்தல் (Referring)
  6. திருத்துதல் (Rectifying)
  7. மறுமுறை வாசித்தல் (Revising)

- வாசித்தல் என்பது மட்டும் தேர்வுக்குப் படிப்பது என்று நினைப்பவர்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள். அவர்கள் முழுவதுமாகப் படிப்பதை வெளிப்படுத்துவது கடினம்.
- வாசிப்பது என்பது வெறுமனே வாசிப்பது அல்ல. நன்றாகப் புரிந்துகொண்டு வாசிப்பது, வாசிப்பதை உள்வாங்கிகொண்டு வாசிப்பது, லயித்து வாசிப்பது நினைவில் நிற்கும்.
- வாசிக்கும்போது "இது கடினம், நமக்கு வராது" என்கிற பதற்றம் சிறிதளவேனும் இல்லாமல் வாசியுங்கள். அது உங்கள் எல்லைகளை விரிவுபடுத்தும்.
- சாப்பிடுகிறபோதே வெறுப்புடன் சாப்பிடுகிறவன் உடலில் செரிக்க உணவு மறுக்கிறது என்பதே உண்மை. படிக்கும் போது வெறுப்பைத் தவிர்த்து பக்கங்களுடன் இயைந்து தவழ்ந்தால் படிப்பு இனிமையாகும்.
- படிக்கும்போது முக்கியமாக கவனிக்க வேண்டியவை

  1. கடிகார முள் எவ்வளவு நகர்ந்திருக்கிறது என்று பார்க்க வேண்டாம்.
  2. பக்கங்கள் எவ்வளவு கடந்திருக்கிறோம் என்றும் பார்க்க வேண்டாம்.

- இறையன்பு IAS

கல்வியியல் ஜெ ஷா